**தலைப்பு 231 – கடன் இணக்கசபை திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 231 கடன் இணக்கசபை திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 11 ஆம் திகதி திணைக்களத்தின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 16.69 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 15.52 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 1.17 மில்லியன் அதாவது 7.01 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக, சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 15.89 | 14.96 | 0.93 | 5.85 |
| மூலதனம் | 0.80 | 0.56 | 0.24 | 30.00 |
| மொத்தம் | 16.69 | 15.52 | 1.17 | 7.01 |

**2.2 முற்பணக் கணக்குகள்**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய விடய இலக்கம் 23101 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 1.20 | 1.12 | 0.30 | 0.91 | 2.50 | 1.84 |

**2.3 கணக்காய்வு அவதானிப்புகள்**

கடன் இணக்கசபை திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பில் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

திணைக்களத்தால் கீழே குறிப்பிடப்படுகின்ற மூன்று பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் மேலும் ஒரு பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | கடமைத் தொலைபேசிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) | பேணப்பட்டிருக்கவில்லை |
| (இ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளது வரையாகப் பேணப்படவில்லை |

**3.2 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.2.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய சகல தகவல்களையும் உள்ளடக்கி சரியான படிவங்களிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வறிக்கை 2016 யூலை 10 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் அண்டின் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அச்சுற்றறிக்கையின் 3.1.4 மற்றும் 3.1.5 ஆம் பந்திகளில் காணப்பிக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட பற்றாக்குறைகள், மிகைகள் மற்றும் அகற்றப்பட வேண்டிய சொத்துக்கள் தொடர்பாக 2017 யூலை 11 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

2015 திசெம்பர் 29 அந் திகதிய 07/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் எரிபொருள் செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடுகளிலிருந்து 15 சதவீதம் கட்டாயமாக சேமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 11 சதவீதம் மாத்திரம் சேமிக்கப்பட்டிருந்தது.

**3.5 செயலாற்றல்**

2016 சனவரி 01 ஆந் திகதி வரையில் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும், தீர்வினை வழங்காதிருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 834 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போது 394 விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 1,228 விண்ணப்பங்களின் நடவடிக்கைகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது 403 விண்ணப்பங்களின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 825 விண்ணப்பங்களின் நடவடிக்கைகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது. அந்த விண்ணப்பங்கள் திணைக்களத்திற்குக் கிடைத்து 01 வருடம் முதல் 10 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்ற தீர்க்கப்படாத விண்ணப்பங்கள் தொடர்பான காலப்பகுப்பாய்வொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

| திணைக்களத்திற்குக் கிடைத்து 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாது நிறுத்தி வைக்கப்பட்ட காலம் | விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய விண்ணப்பங்கள் | 32 |
| 06 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான காலத்தை எடுத்திருந்த விண்ணப்பங்கள் | 45 |
| 03 வருடங்களுக்கு 06 வருடங்களுக்கும் இடையிலான காலத்தை எடுத்திருந்த விண்ணப்பங்கள் | 143 |
| 01 வருடத்திற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான காலத்தை எடுத்திருந்த விண்ணப்பங்கள் | 305 |
| ஒரு வருடத்திற்குக் குறைவான காலத்தை எடுத்திருந்த விண்ணப்பங்கள் | 300 |
| மொத்தம் | 825 |

**3.6 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 01 | - | 01 |
| (ii) | இரண்டாம் நிலை | 14 | 08 | 06 |
| (iii) | மூன்றாம் நிலை | 06 | 05 | 01 |
| | மொத்தம் | **21** | **13** | **08** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 மே மாதம் முதல் வெற்றிடமாகக் காணப்படுகின்ற செயலாளர் பதவிக்காக அவ்வப்போது பதில் கடமை நியமனம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2017 யூன் 15 ஆந் திகதி வரையிலும் அந்த பதவிக்காக உள்ளபடியாக உத்தியோகத்தரொருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுருக்கெழுத்து உத்தியோகத்தர்களில் மூவருக்கு வெற்றிடங்கள் காணப்படுவதனால் உரிய காலத்தில் வழக்கு அறிக்கைகளை தட்டச்சு செய்வதற்கு முடியாதிருந்தது.

(இ) திணைக்களத்திற்குச் சொந்தமாக இரண்டு வாகனங்கள் காணப்பட்ட போதிலும், ஒரு சாரதி மாத்திரம் நியமிக்கப்பட்டமையால் நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு இடையூறாகக் காணப்பட்டது.